**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, PADMANABHAPURAM**

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

## C.C.No. 449/2022 P.W.4 Additional Witness

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. பாரதிராஜா (ஆய்வாளர்) | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. பெரியசாமி | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day** 05.03.2026

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்பொழுது தக்கலை காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். மேற்படி காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்த சுதேசன், நெப்போலியன் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் தினகராஜ் ஆகியோர்களை நன்கு தெரியும். அவர்களின் கையொப்பம் மற்றும் கையெழுத்தை நன்கு அறிவேன். வழக்கின் தன்மை கருதி வழக்கு கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 25.03.2022 ம் தேதி 18.30 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் தினகராஜ் என்பவரிடம் செர்லியா ஜிபி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று புகார் மனுவின் தன்மைப்படி காவல்நிலையக்குற்ற எண். 114/2022 சட்டப்பிரிவுகள் 279, 304(A) இதசன் கீழ் வழக்குப்பதிவு செய்துள்ளார்.

**மேற்படி முதல் தகவல் அறிக்கை அசாஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார் மனுவை கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், நகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் ஒரு நகலை விசாரணைக்காக ஆய்வாளரின் பார்வைக்கும் வைத்துள்ளார்.

3. மேற்படி வழக்கு கோப்பை ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்ததை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 25.03.2022ம் தேதி 19.30 மணிக்கு வழக்கின்

சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்துள்ளார். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 மற்றும் பார்வை மகசர் அ.சா.ஆ.5 ஆகும்.** சாட்சிகளிடம் கையொப்பமும் பெற்றுள்ளார்.

4. மேலும் இவ்வழக்கில் இறந்து போன நபரான அனிராஜ் என்பவர் பிரேதத்தின் மீது ஆசாரிபள்ளம் அரசு மருத்துவனையில் வைத்து பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேதவிசாரணை மேற்கொண்டு சடலகூறாய்வுக்கு அனுப்பப்பட்டது. அதன் பிறகு அனிராஜ் பிரதேதத்தை அவர்களது உறவினர்களிடம் நல்லடக்கம் செய்ய கொடுக்கப்பட்டது. அந்த பிரதே விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 10 ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5. மேலும் இவ்வழக்கில் ஈடுபட்டுள்ள வாகனமான TN 75 X 0158 என்ற பல்சர் இருசக்கர வாகனம் மற்றும் NL 01 B 1190 என்ற வால்வா பேருந்தையும் மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தி மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்று மோட்டார் ஆய்வாளரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அந்த மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் **அ.சா.ஆ. 7 மற்றும் அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. மேலும் சடல கூறாய்வு செய்த மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவரிடம் இருந்து சடல கூறாய்வு அறிக்கை பெறப்பட்டுள்ளது. அந்த சடல கூறாய்வு அறிக்கை **அ.சா.ஆ. 9** ஆக குறியீடு செய்யப்பகிறது. மேலும் இறந்து போன நபரின் சடல கூறாய்வில் இருந்து பெறப்பட்ட இறுதி கருத்துரை அறிக்கை **அ.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கைப்பதிவுச் செய்த உதவி ஆய்வாளர் தினகராஜ் விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்துள்ளார். பின்பு குற்றம் சுமத்தப்பட்ட நபர் நிலைய ஜாமீனில் விடுவிக்கப்பட்டார். இத்துடன் வழக்கின் விசாரணை முடித்து சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது சட்டப்பிரிவிகள் 279, 304(A) இதசன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**குறுக்கு விசாரணை** :

24.03.2022ம் தேதியன்று இரவு 08.30 மணியளவில் சம்பவம்நடந்ததாக கூறப்பட்டுள்ளது என்றால் இரவு 09.15 மணிக்கு சம்பவம் நடந்ததாக

குறிப்பிடப்பட்டுள்ளது. 25.03.2022ம் தேதியன்று 18.30 மணிக்கு தான் புகார் மனு கொடுக்கப்ட்டது என்றால் சரிதான். புகார் மனு காலதாமதாக கொடுக்கப்பட்டது குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இல்லை. அ.சா.1 காவல் நிலையத்திற்கு வந்து நேரடியாக புகார் மனு கொடுத்தார் என்றால் சரிதான்.

சம்பவயிடம் செல்லாமலும் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமலும் புகார் மனுவினை முறைப்படி விசாரணை செய்யாமலும் நடக்காத சம்பவத்தை நடந்ததாக சித்தரித்து இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்ப்பும் இல்லை என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை – முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.1
பத்மனாபபுரம்.(FAC)